# பணிகள் புரிய வந்தார்

பணிகள் புரிய வந்தார் - சீடர்
பாதம் கழுவிப் பணிந்தார் - 2
அன்பை வளர்க்கும் உறவு - இயேசு
தன்னை ஈந்தர் உணவாய் - 2

**1)**
தொட்டதும் தீர்ந்தது தொழுநோய்-சொல்லைக்
கேட்டதும் அகன்றது அலகை - 2
பி;ட்டதும் பலுகியதப்பம் - 2
அதைப் பகிர்ந்ததும் தீர்ந்தது பசியே...(பணி )

**2)**
அழைத்ததும் பிறந்தது மாற்றம் - அவர்
nஜபித்ததும் வந்தது உயிரே - 2
மன்னிப்பும் தந்தது மகிழ்ச்சி - 2
அதை உணர்ந்ததும் கனிந்தது வாழ்வே...